நில உச்ச வரம்புச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கான நடைமுறைகள்.

*வினா எண் 552.—திரு இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் நகர்ப்புற நில உச்ச வரம்பு சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதில் பெரிய தொழிற்சாலைகள் எதிர்காலத்தில் தங்களுடைய தொழில் நிறுவனங்களை விஸ்தரிப்பதற்கு காலியாக விட்டு வைத்துள்ள நிலங்களையும் உபரி நிலம் என்று கருதி நில உச்ச வரம்பு சட்டத்தின் கீழ் கையகப்படுத்துவதை ஆட்சேபித்து தொழிற் நிறுவனங்கள் அரசிடம் முறையீடு செய்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் நிவர்த்தி செய்ய அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) தென்னிந்திய நெசவாலை உரிமையாளர்கள் சங்கத்திடமிருந்து, நகர்புற நில உச்ச வரம்பு சட்டத்தை அமுல்படுத்துவதில் ஏற்படும் கஷ்டங்களை நீக்கக் கோரி ஒரு விண்ணப்பம் வந்துள்ளது.

(ஆ) நெசவாலைகளின் விலக்கு விண்ணப்பங்கள் மீது அரசு துரித நடவடிக்கை எடுத்து உத்தரவு பிறப்பித்து வருகிறது. இதர கோரிக்கைகள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே தொழில் வளம் வளரவும் பல பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய வகையிலேயும் தொழிற்சாலைகளை விஸ்தரிப்பதற்கு உச்ச வரம்பிலிருந்து விதிவிலக்கு அளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, தொழில் செய்கிறவர்கள் தங்களுடைய தொழில்களை மேலே விருத்தி செய்வதற்காக நிலங்களைக் கேட்டால் அவர்கள என்ன செய்யப்போகிறார்கள் என்பதைக் குறித்து வரைபடத்தின் மூலமாகத் தெரிவித்தால் அதற்கான விவரங்களையெல்லாம் கொடுத்தால் 2 ஆண்டு காலத்திற்குள்ளாக அரசு உத்தரவிட வேண்டுமென்று சொல்லி நிலங்களை அவர்களுக்குக் கொடுத்து வருகிறது.

1982 மார்ச் 19]

திரு இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, தொழிற் சாலைகளுக்கு உச்ச வரம்பினின்று விதிவிலக்கு அளிப்பதை பரிசீலிப்பதற்காக என்று குழு உள்ளதா? அந்தக் குழுவில் யார் யார் உறுப்பினர்கள் என்பதை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவில் நிலச் சீர்திருத்த ஆணையாளர் அமைப்பாளராக இருப்பார்கள். வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சித்துறை தொழில்துறை செயலாளர்கள் உறுப் பினர்களாக இருப்பார்கள். இயக்குனர் செயலாளராக இருந்து பணியாற்றுவார். அவர்கள் அதைப் பார்த்து சிபாரிசு செய்து அனுப்பினால் அரசு முடிவு எடுக்கும்.

திரு எஸ். ஆண்டித் தேவர் : தலைவர் அவர்களே, தொழிற் சாலைகள் மறுபடியும் விஸ்தரிப்பு என்ற பெயரால் பல ஏக்கர் நிலங்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். தொழிற்சாலை களுக்குத் தவிர மற்றக் காரியங்களுக்கு பயன்படுத்தக் கூடாது என்று திட்ட வட்டமாக அரசு ஆணையிடுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர் களே, நகர்ப்புற உச்ச வரம்பு சட்டத்தில் இது விளக்கமாகத் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை யில் தொழிற்சாலைகள் பிரதானமாக மேலுக்கு வருவதற்கு ஊக்குவிக்க வேண்டியிருக்கிறது. அப்படிச் செய்கிற தொழிற் சாலைகள் விவரமான அறிக்கைகளை அந்தக் குழுவிடம் கொடுத் தால் அவர்கள் பரிசீலித்து சிபாரிசு செய்வார்கள்; பிறகு அரசு உத்தரவு போடுகிறது. உத்தரவைப் போடுகிறபோது அவர்கள் என்ன செய்யப்போகிறார்கள் என்பது மட்டுமல்ல, நிதி வசதி ஆதாரம் இருக் கிறதா என்பதையும் அவர்களால் செய்ய முடியுமா என்பதையும் ஆராய்ந்து, இரண்டு ஆண்டுகளுக்குள் செய்ய வேண்டு மென்றும், ஆறு மாதத்திற்கு ஒரு முறை புராக்கிரஸ் ரிப்போர்ட் அனுப்ப வேண்டு மென்றும் இவ்வளவு விதிமுறைகளை வைத்துத்தான் அரசு உத்தரவு போடுகிறது.

திரு. கோவைத் தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நில உச்ச வரம்பு சட்டம் நடைமுறைப்படுத்து வதிலே, தொழிற்சாலைகள் நிரம்பிய கோவை மாவட்டத்திலே அரசு இன்று இரண்டு ஆண்டுகளுக்குள் தொழிற் கூடங்களை கட்டினால்தான் காலி இடங்களை வைத்துக் கொள்ளலாம் என்று ஒரு நிலையை 5 ஆண்டுகளாக கூட்டினால் தான் அவற்றைக்

கட்டக்கூடிய நிலைமை இருக்கிறது. அரசு தொழிற்சாலைகள் நிரம்பிய கோவை மாவட்டத்திற்கு அந்த காலத்தைக் கொஞ்சம் நீட்டித் தருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு ஆண்டுகள் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆறு மாதத்திற்கு ஒரு முறை புராக்கிரஸ் ரிப்போர்ட் அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். அவற்றை பார்க்கிற போது, வேலை நடந்து கொண்டிருந்தால் மேலும் இதுபற்றி மனு செய்தால் அதையும் அரசு பரிசீலிக்கும்.

திரு என். வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நகர நில உச்ச வரம்பானாலும், கிராமப்புற நில உச்ச வரம்பானாலும் நம்முடைய நாட்டிலே விதிவிலக்கு என்ற பெயராலே உச்சவரம்புச் சட்டம் கேலிக் கூத்தாக ஆக்கப் படுகிற வரலாறுதான் நம்முடைய நாட்டு வரலாறு. இதை இரண்டு பகுதியாக பார்க்க வேண்டும். வளர்ந்து வருகிற சிறு நடுத்தர தொழிற்சாலைகளுக்கு உதவி செய்வது; பெருத்த ஏகபோகமான தொழில்கள் தன்னைப் பாதுகாத்துக் கொண்டு மேலும் விஸ்தரிப்பதற்கென்று நிலத்தை வைத்துக் கொள்வதற்கு அனுமதி கேட்பது என்று இரண்டு பகுதியாக இருக்கிறது. ஆகவே அதிகாரிகள் கொண்ட குழு மட்டுமல்லாமல் சட்டமன்ற உறுப்பினர்களும் இணைந்த குழு போட்டு சமுதாய பார்வையோடு அங்கீகாரம் அளிப்பதற்கு அரசு அனுமதி அளிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லியபடி சமுதாய பார்வையோடு பார்ப்பது மிக அவசியம் என்பதை ஏற்றுக் கொள்கிறேன். இந்தக் குழு சிபாரிசு செய்தாலும் அமைச்சரவைக்கு அது வருகிறபோது சமுதாய கண்ணோட்டத்தோடு பார்க்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு இல. பலராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகர நில உச்ச வரம்பின் கீழ் தொழிற்சாலைகளுக்கு அனுமதி வழங்குகிற போது எவ்வளவு நிலம் வைத்திருக்கலாம் என்ற நிலை இருக்கிறது. இது போன்ற நிலம் வைத்திருந்து வீட்டு மனையாகவோ மற்றவையாகவோ விற்றவர்கள் எவ்வளவு பேர்கள்? இது குறித்து அரசின் கவனத்திற்கு எதுவும் வந்திருக்கிறதா? நில அளவைக் குறைப்பதற்கு அரசு மாற்றுத் திட்டம் வைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இருக்கிற நகரங்களை மூன்றாகப் பிரித்து இருக்கிறோம். இன்றைக்கு இது எல்லா நகரங்களிலும் இல்லை. சென்னையை முதல் பிரிவிலே சேர்த்து இருக்கிறோம். சென்னையிலே தொழிற்சாலைகள் 2,000 சதுர மீட்டர் வைத்துக் கொள்ள முடியும். இரண்டாவது பிரிவாக, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, சேலத்தை வைத்திருக்கிறோம். அவர்கள் 3,000 சதுர மீட்டர் வைத்திருக்க முடியும். திருநெல்வேலியை மூன்றாவது பிரிவாக வைத்திருக்கிறோம். அவர்கள் 4,000 சதுர மீட்டரை வைத்துக் கொள்ளலாம். இந்த நகரங்களைத்தான் நில உச்ச வரம்பு சட்டத்திற்குள் வைத்திருக்கிறோம். நில உச்ச வரம்பு சட்டம் வந்ததற்குப் பிறகு 3—8—76-க்கு பிறகு அவர்கள் அந்த நிலத்தை விற்றிருக்க முடியாது. விற்றிருந்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

பள்ளிகளை நடத்த நிர்வாகக் குழுக்கள் அமைத்தல்

*வினா எண் 553—திரு. கா. கோபால கிருஷ்ணன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்து சமூகத்தைச் சேர்ந்தவர் பள்ளியை நடத்தினால் நிர்வாகக் கமிட்டி அமைக்க வேண்டும் என்றும் மற்றவர் நடத்தினால் அது வலியுறுத்தப்படுவதில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் வரன் முறைச் சட்டம், 1973-ன் பிரிவு 15—ன் படி ஒவ்வொரு பள்ளியிலும் பள்ளிக் குழு (School Committee) அமைக்க வேண்டும். ஆனால் சிறுபான்மையினரால் நடத்தப்படும் பள்ளி நிர்வாகிகள் சென்னை உயர்நீதி மன்றத்தில் மேற் சொன்ன சட்டத்திற்கெதிராக தொடுத்த வழக்கில் பள்ளிக் குழுக்கள் அமைத்தல் தொடர்பான சட்டப் பிரிவு 15 உட்பட பல பிரிவுகள் மொழி மற்றும் மத அடிப்படையில் அமைந்த சிறுபான்மையினர் பள்ளிகளுக்குப் பொருந்தாது என 17—12—75 அன்று உயர்நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. இதன் காரணமாக சிறுபான்மையினர் நடத்தும் பள்ளிகளில் பள்ளிக் குழு ஏற்படுத்தும்படி வலியுறுத்த இயலவில்லை.